# ஓஎன்ஜிசி பொதுப் பள்ளியில் உலகத் தாய்மொழி தின விழா

இடம்: நிரவி நாள்:21.02.2022

ஓஎன்ஜிசி பொதுப் பள்ளியில் திங்கட்கிழமை (21.02.2022) அன்று காலை 10.30 மணி அளவில் உலக தாய்மொழி தின விழாவானது சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவானது பள்ளி தாளாளர் திரு. கண்ணன் மற்றும் கல்வி இயக்குநர் திரு. பொன். ராமன் ஆகியோரின் அறிவுறுத்தலின்படி பள்ளி முதல்வர் திரு சுவாமிநாதன் மற்றும் துணை முதல்வர் எட்வின் சாமுவேல் ஆகியோரின் வழிநடத்தலின்படி மொழித்துறை சார்ந்த ஆசிரியர்களால் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக ஓஎன்ஜிசி பொதுப் பள்ளியின் முதல்வர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புச் செய்தார்.





இந்நிகழ்வினைச் சிறப்பு விருந்தினர் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி தமிழ் அன்னையை வணங்கி தொடங்கி வைத்தார். இறைவணக்கப் பாடலும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலும் பாடப்பட்டது. மாணவர் செல்வன் தி. கிஷோர் அனைவரையும் வரவேற்றார். தொடர்ந்து, சிறப்பு விருந்தினர் அவர்களைப் பள்ளி துணை முதல்வர் அவர்கள் சிறப்பு செய்து நினைவுப் பரிசு வழங்கினார்.





இ ... ீனிவா ... ளை
அ ... ாவன் ... ந்தி
மொழியின் சிறப்புகளை எடுத்தியம்பினார். அடுத்த நிகழ்வாக பள்ளி மாணவர்கள் தமிழ் மொழியின் சிறப்புகளைக் கூறும் வகையில் பாடல்

Created with
PDFBear.com

ஒன்றை இசைத்தனர். தொடர்ந்து, மலையாளம் மற்றும் சமஸ்கிருத மொழிகளின் சிறப்புகளை மாணவர்கள் ஆர்ஜித் மற்றும் ஸ்ரீராம் எடுத்துரைத்தனர். தொடர்ந்து மாணவி கிறிஸ்டி தமிழ் மொழியின் சிறப்பினை கவிதைத் தொகுப்பாக எடுத்தியம்பினார்.





சிறப்பு விருந்தினர் அவர்கள் தன்னுடைய சிறப்புரையில் மொழி எவ்வாறு உலகில் தோன்றியது என்பதை சான்றுகளோடு மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். தாய் மொழியின் சிறப்பினையும் தாய்மொழி வழிக்கல்வி சிறப்பினையும் மாணவர்கள் உணரும் வண்ணம் விளக்கிக் கூறினார். தொடர்ந்து, உலகில் தோன்றிய எந்த மொழியும் உயர்ந்தது தாழ்ந்தது அன்று அனைத்து மொழிகளும் சிறப்புக்குரியது. தாய்மொழிவழிக் கல்வி என்பது ஒருவரை தலைசிறந்த சிந்தனையாளராகவும் சமுதாயத்தில் உயர்ந்தவனாகவும் தூக்கிப் பிடிக்கும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. மொழி என்பது மனிதனுடைய உணர்வுகளை பிரதிபலிக்கும் கண்ணாடியாக அமைகிறது. உலகில் சிறந்த மொழிகளை நாம் கற்றுக் கொள்வது என்பது அவசியம் அதற்காக தன் தாய் மொழியை மறந்து விடுதல் கூடாது. ஒவ்வொருவரும் தன் தாய்நாட்டையும் தன் தாய்மொழியையும் போற்றிக் காப்பது தலையாயக் கடமையாகும் என்று எழுச்சியுரையாற்றினார்





Created with
PDFBear.com

.

தொடர்ந்து, வாழிய செந்தமிழ் என்ற மகாகவி பாடலை இசைத்தனர். மாணவி சுருதி நன்றியுரை நவில, இந்நிகழ்வினை மாணவி ஐஸ்வர்யா சிறப்பாகத் தொகுத்து வழங்க, அனைத்து ஆசிரியர்கள் மற்றும் அலுவலக அலுவலர்களின் ஒத்துழைப்போடு இவ்விழாவானது செவ்வனே நிறைவுற்றது.

Created with
PDFBear.com